# கிறிஸ்துவேதம் வாசிக்க இனிமையானது

கிறிஸ்துவேதம் வாசிப்போர்க்குப் பிரியவீனத்தை விளைவிக்கக்கூடிய ஓர் புத்தகமென்று நினைத்தல்பெரும் பயித்தியம். மார்க்கத்தைக்குறித்துப்பேசும் மற்றெல்லாப்புத்தகங்களும் வாசிக்க உசிதமானவையல்லவென்றுசொன்னாலும், வேதத்தைப்பற்றி அவ்விதமாய்ச் சொல்லக்கூடாது. ஏனென்றால், முந்தியவைகள் மனுஷரால் உண்டாக்கப்பட்டன, வேதமோ அதிக அன்புள்ள தேவனால் உண்டாக்கப்பட்டது. அவர் நம் எல்லாரையும் சிருஷ்டித்துக் காப்பாற்றுகிறவரும் நம்முடைய பரமபிதாவுமாயிருக்கிறபடியினால், அவர் திருவுளம்பற்றிய வார்த்தைகள் நமக்கு எல்லாவற்றிலும் இனிமையாயிருக்கவேண்டும்.

தேவன் சகல மனுஷரிலும் அன்புகூருகிறபடியால், எவனுக்குச் சத்தியவேதம் கசப்பாய் இருக்கிறதோ அவனிற் குற்றம் இருக்கவேண்டும். வேதம் மதுரமுள்ளதாயிருந்தும் அப்படிப்பட்டவனுடைய நா வருத்தமுள்ளதாயிருக்கிறபடியால் அவனுக்குக் கசப்பாய்த் தோன்றும். ஆயினும் அவனுக்கும் நன்மைசெய்ய எங்கள் பரமபிதா ஆசையாயிருக்கிறார். ஆகையால் எதுமெய் எதுபொய்யென்றும், தான் செய்யவேண்டிய கடமை என்னவென்றும் முழுமனதோடு விசாரிக்கிறவன் எவனோ அவன் சத்தியவேதத்தினாற் சந்தோஷமடைவான்.

சிலர் மெய்யான அறிவைத்தேட மனமுள்ளவர்களாயிருந்தும், தங்கள் சொந்த மார்க்கத்தில் மெய்யான அறிவிருக்கவேண்டுமென்று ஞாயமின்றி நினைத்து, தேவன் கிறிஸ்துவேதத்திலே கொடுத்தருளின மெய்யான அறிவை ஏற்றுக்கொள்ள மனமற்றிருக்கிறார்கள். இவர்களுக்குக் கிறிஸ்துவேதம் கசப்பாயிருக்கிறது ஆச்சரியமல்ல. துன்மார்க்கமாய் நடக்கிறவர்கள் எல்லாருக்கும் வேதம் கசப்பாயிருக்கும். அதிலே பாவத்தைக் குறித்துச் சொல்லப்பட்டவைகள் மிகவும் பயங்கரமானவைகள். பாவத்தைச் செய்கிறவர்கள்மேல் தேவகோபாக்கினை நிச்சயமாய்வரும்.

மனதுக்குப் பிரியத்தைக்கொடுக்கும் வாசிக்கத்தக்க எல்லாப்புத்தகங்களிலும் இது விசேஷமுடையது. இது எத்தனையோ காரியங்களைக்குறித்துப் பேசுகிறது. இதிகாசங்கள் ஞானப்பாட்டுகள், பெரியோருடைய சீவியவிருத்

ஸ்தோத்ரங்கள், தீர்க்கதரிசனங்கள், உவமைகள், அப்போஸ்
தலர் பண்ணின பயணவரலாறுகள், அவர்களுக்குக் கட
லினாலும் அஞ்ஞானிகளினாலும் வந்த மோசங்கள், ஞாய
சாஸ்திரங்கள், சொப்பனங்கள் முதலானவைகள் இதில்
அடங்கி இருக்கின்றன. இத்தன்மையுடைய இது எல்
லாருக்கும் ஒப்ரயிதமான இரக்கத்தைக் காட்டுகிறது. எங்
கள் மனம் சவுக்கியமான எந்த ஸ்திதியில் இருந்தாலும்
வேதத்தை வாசித்தால் அது சந்தோஷமடையும்.

பின்னும் கிறிஸ்து வேதம் சன்மார்க்கத்தைப் பற்றி மிக
வும் மேன்மையான காரியங்களைப் பேசுகிறபடியாலும்
அது இனிமையாயிருக்கிறது: தாவீது ராசா. "கர்த்தருடைய
நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்
கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும்
கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருக்குப்
பயப்படுகிறபயம்சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமா
யிருக்கிறது; அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொ
ன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்
டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்
கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்ச
ரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால்
மிகுந்த பலனுண்டு" (சங் 19: 8-11) என்று பாடினான்.
சன்மார்க்கத்தைப்பற்றிப் பேசுகிற மற்றப் புஸ்தகங்கள்
இப்படியிராமற் கடுமையாயும் பயத்தைக் கொடுக்கின்றன
வாயும் கசப்புள்ளனவாயும் இருக்கின்றன.

மெய்யான சந்தோஷமும் சமாதானமும், வேதம் காண்
பிக்கிறவழியில் நடக்கிறவர்களுக்கு மாத்திரம் உண்டு. இ
வர்களுக்கு வேதம் தங்களுடைய மேய்ப்பரான தேவனு
டைய வார்த்தையாயிருக்கிறது. அந்த வார்த்தையினால் அ
வர் அவர்களைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த
தண்ணீர்கள் அண்டை கொண்டுபோய் விடுகிறார். அவர்
அவர்களுடைய ஆத்துமாவைத் தேற்றித் தம்முடைய நா
மத்தின் நிமித்தம் அவர்களை நீதியின் பாதைகளில் நடத்
துகிறார். (சங். 23 : 2, 3) உண்மையானதும் படிப்
பிக்கப்படத்தக்கதுமான ஆவியோடு இவ் வேதத்தை வா
சித்தால் மிகவும் இனிமையாயிருக்கும்.

ஏன் சன்மார்க்கமாய் நடக்கவேணும் என்னும் கேள்
விக்குக் கிறிஸ்துவேதம் நல்ல மறுமொழி சொல்லுகிறது.

இவ்வுலகத்தில் நாம் அதினால் பேரின்பத்தை அடைவோம்
என்கிறது; அல்லாமலும் அதனால் தேவனைப்போலாகி
றோம் என்றும் சொல்லுகிறது. அதற்குத் திருஷ்டாந்தங்க
ளாவன: "உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரி
சுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்." (லேவி.
19: 2.) "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள்
சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை
ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்
மைசெய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்
களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம்பண்ணு
ங்கள். இப்படிச்செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்
கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராய் இருப்பீர்கள்; அவர்
தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்
பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலு
ம் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்." (மத். 5: 44, 45)
"பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கக்
கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்
கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து தேவனை
அறிந்திருக்கிறான்; அன்பில்லாதவன் தேவனை அறி
யான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவா.
4: 7, 8). இவ் வசனங்கள் தேவனைப்போலிருக்கவும்.
தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றவும், அவருடைய கி
ருபையினால் திருப்தி அடையவும் எங்களுக்குப் பிரியத்
தைத் தருகிறதினால், எங்களைச் சன்மார்க்கமாய் நடக்க ஏ
வுகின்றன. மற்றப் புத்தகங்கள் நாம் போகவேண்டிய நல்
வழியைக் காண்பிக்கிறதேயல்லாமல் அதில் நடந்துபோக
எங்களுக்கு ஒருதுணையையும் காட்டவில்லை. ஆனபடியா
ல் சன்மார்க்கத்தைப்பற்றி அறிந்தும் அதைப் பின்பற்றக்
கூடாதவர்களாயிருந்து, மிகவும் துன்பத்துக்கு ஆளாகிறோ
ம். ஆனால் வேதம் அப்படியல்ல, சன்மார்க்கத்தைப்பற்றிப்
படிப்பித்து அதற்கு ஏற்றவிதமாய்ச் சீவிக்கிறதற்கு அவசர
ம் வேண்டிய தேவகிருபையை அடைந்து கொள்ளலாமெ
ன்றும் காண்பிக்கிறது. அப்படியே பரிசுத்த பவுல் தன்
சொந்தப்பெலனைக்கொண்டு சன்மார்க்கமாயிருக்கக்கூடா
தென்று அறிந்து: "நிர்ப்பந்தமான மனுஷன் நான், இந்த
மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்"
(ரோ. 7: 24.) என்றுசொன்னாலும் கிறிஸ்துவின் உதவியினால்

எல்லாம் முடியும் என்று அறிந்திருக்கிறபடியால்: "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (ரோ. 7: 25) என்றான். "என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்திலே என்பலன் பூரணமாய் விளங்கும்" என்று அவனுக்குச்சொல்லப்பட்டதாகையால்: "கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என்பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்" என்று சொன்னான். (2 கொரி 12: 9) இவ்விதமாய்த் தொந்தரவும் துக்கமுமானவைகளிலிருந்தும் இனிமையானவைகளைத் தெரிந்துகொள்ள மேன்மையான இப்புஸ்தகம் நமக்குப்படிப்பிக்கிறது.

அன்றியும் கிறிஸ்து வேதம் தேவனையும் அவர் மனிதருக்காகச்செய்தருளின காரியங்களையும்பற்றி எழுதப்பட்ட தேவவெளிப்படுத்தலாய் இருக்கிறது. இந்தவிசேஷத்தினால், வேதம் எல்லாவற்றிலும் முக்கியமானதும், சிறப்பானதும், ஆத்துமாவைத் திருப்திப்படுத்துகிறதுமான ஓர் புஸ்தகமென்றதற்குச் சந்தேகமில்லை. எங்கள் பரமபிதாவாகிய தேவன் எங்கள்மேல் அன்பும் தயவுமுள்ளவராயிருக்கிறார் என்றதை அதில் வாசிக்கிறதினாற் சந்தோஷம் அடைகிறோம். அவர் பரிசுத்தவான்களுக்காகச் செய்த அற்புதங்களின் சரித்திரங்களை வாசிக்கும்போது வைராக்கியமுள்ளவர்களாகிறோம். அவருடைய வாக்குத்தத்தங்களை அறிவதினால் நமக்கு நம்பிக்கை உண்டாகிறது.

கடைசியாய், வேதத்தினால் வரும் ஆவியின் பெலனைக் குறித்துச் சிந்திப்போமாக. தேவ வார்த்தையை உட்கொள்ளும்போது ஆத்துமாவுக்கு ஒளி உண்டாகிறது. "உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால் எனக்குப் போதித்தவர்கள் எல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன்" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். பரிசுத்தவேதம் ஆத்துமாவுக்குச் சாப்பாடாயிருக்கிறது. ஆனபடியால் நாம அதைக்கேட்டு வாசித்துக் கவனித்துக் கற்றறிந்துக்கொள்ள வேண்டும். நாங்கள் எங்கள் சரீரத்துக்காக எப்படிச் சாப்பிடுகிறோமோ அப்படியே நாளுக்குநாள் இந்த ஆத்தும உணவை யுட்கொள்ள வேண்டும். அப்போ அது எங்கள் நாவுக்கு இனிமையாயும், வாய்க்குத்தேனிலும் மதுரமாயுமிருக்கும். "தேவனுடைய வேதத்தைநேசிக்கிறவர்களுக்கு மிகுந்தசமாதானமுண்டு." சங். 119:165.

Strong and Asbury Printers, Manippay 1888. Edition 5,000.